# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2140/54 - 2019 සැප්තැම්බර් මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.09.12

*2140/54 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் பிரகாரம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கண்டி வடக்கு - பாத்ததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ், முல்லேபிஹில்ல மேல் நீர்த் தாங்கியை நிர்மாணிப்பதற்காக மேலதிக காணித்துண்டு ஒன்றை கையகப்படுத்தத் தேவைப்படுவதனால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இலக்கம் 35, புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2019, செத்தெம்பர் 09.

5/2/1/1498.

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில், கண்டிப் பட்டினம் (கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட கோரளே) பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 274, வெவதென்ன கிராம அலுவலர் பிரிவில், அலுபதகட கிராமத்தில் அமைந்த அதிகாரம்பெற்ற நில அளவையாளர் திருமதி ஜே. பி. கே. வீரகோன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 0215 - S ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 01 இன் பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ள "அலுபதகட ஹேன மற்றும் ஒருவேஹேன" என்னும் பெயருடைய காணியின் முழு அளவில் 13.6 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய கீழ்க் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு ஒன்று.*

*காணித்துண்டு இலக்கம் : 1 இன் பகுதி*
*காணியின் பெயர் : அலுபதகட ஹேன மற்றும் ஒருவேஹேன*
*காணியின் விஸ்தீரணம் : 13.6 பேர்ச்சஸ்.*

**காணியின் எல்லைகள்:**

| | | |
|---|---|---|
| வடக்கு | : | இந்தக் காணியின் எஞ்சிய பகுதி மற்றும் அலுபதகட ஹேன மற்றும் ஒருவேஹேன ; |
| கிழக்கு | : | ஒருவேஹேன (வீட்டுத் தோட்டம்) ; |
| தெற்கு | : | இலக்கம் 0215-S ஐக் கொண்ட நில அளவையாளர் வரைபடத்தின் காணித்துண்டிலக்கம் 02 (உட்பிரவேசிக்கும் பாதை) இனால் குறிப்பிடப்படும் வரையறுக்கப்பட்ட அரலிய கிரேன்ட் கலம்பு ஹொடெல் (தனியார்) நிறுவனம் உரிமைகோரும் அலுபதகட ஹேன ; |
| மேற்கு | : | இந்தக் காணியின் எஞ்சிய பகுதி. |

*மேற்குறிப்பிடப்படும் காணித்துண்டுகளுக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

திரு. கல்யான பிரபோத திசாநாயக்க,
வீ. சீ. இலக்கம் 305,
அலுபதகட,
பல்லேகம.

*09-913*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.